




காரைக்குடி நியூஸ்








KARAIKUDI NEWS | 14-JULY-2026 | செவ்வாய்க்கிழமை | E-PAPER | 13 Pages


# உஞ்சனை அங்கன்வாடி மையத்தை சுற்றிக் கழிவு நீர் தேக்கம்

# நடவடிக்கை எடுக்க கோரி பெற்றோர்கள் வலியுறுத்தல்

உஞ்சனை அங்கன்வாடி மையத்தைச் சுற்றி கழிவுநீர் தேக்கம் – குழந்தைகளுக்கு தொற்றுநோய் அபாயம்; உடனடி நடவடிக்கை கோரி பெற்றோர் வலியுறுத்தல்

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை அருகே கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட உஞ்சனை கிராமத்தில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையத்தைச் சுற்றி கழிவுநீர் தேங்கி நிற்பதால், அங்கு வரும் குழந்தைகளின் உடல்நலம் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். இந்த அங்கன்வாடி மையத்திற்கு தினமும் 20க்கும் மேற்பட்ட சிறு குழந்தைகள் வந்து செல்கின்றனர். இந்நிலையில், சமீபத்தில் பெய்த மழையால் மைய வளாகத்தைச் சுற்றி தேங்கிய மழைநீர், காலப்போக்கில் கழிவுநீராக மாறிதுர்நாற்றம்வீசுவதுடன் சுகாதார சீர்கேட்டையும் ஏற்படுத்தி வருகிறது.

தேங்கியுள்ள நீரில் கொசுக்கள் பெருகும் சூழல் உருவாகியுள்ளதால், குழந்தைகள் மற்றும் அப்பகுதி மக்களுக்கு டெங்கு, மலேரியா உள்ளிட்ட தொற்று நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாக பெற்றோர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். மேலும், குழந்தைகள் விளையாடும் மற்றும் நடமாடும் இடங்களுக்கு அருகிலேயே கழிவுநீர் தேங்கியிருப்பது பாதுகாப்பு மற்றும் சுகாதார ரீதியாக பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும்அவர்கள்கூறுகின்றனர். எனவே, தேங்கியுள்ள கழிவு நீரை உடனடியாக அகற்றி, மழைநீர் தேங்காத வகையில் நிரந்தர வடிகால் வசதிகளை ஏற்படுத்தி, அங்கன்வாடி மைய வளாகத்தை சுத்தமாக பராமரிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனபெற்றோர்களும்பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.







# தேவகோட்டை அரிஸ்டோ லயன்ஸ் சங்க புதிய நிர்வாகிகள் பணி ஏற்பு விழா













தேவகோட்டை அரிஸ்டோ லயன்ஸ் சங்க 2026-27 புதிய நிர்வாகிகள் பணி ஏற்பு

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டைஅரிஸ்டோ லயன்ஸ் சங்க 2026-27 புதிய நிர்வாகிகள் பணி ஏற்பு தலைவர் லயன் ஜெபமாலை தலைமையில் ராம்நகர் ரோட்டரி பார்க் ஹாலில் நடைபெற்றது.

தலைவராக லயன் மணிகண்டன்,செயலராகலயன் பேராசிரியர் மாரி, பொருளாளராக ஆசிரியை லயன் சாந்தி, மற்றும் பிற பொறுப்பாளர்கள் பணி ஏற்றனர்.

புதிய நிர்வாகிகளை முன்னாள் ஆளுநர் லயன் கிரியேட்டிவ் ராதாகிருஷ்ணன் பதவியில் அமர்த்தினார்.

முன்னாள்ஆளுநர்லயன் கள்ளந்திரி முத்து ராமலிங்கம் புதிய உறுப்பினர்களை இணைத்தார். மண்டலத் தலைவர் லயன் பெரியசாமி உறுப்பினர்கள் தலா ஒரு சேவை என்ற அடிப்படையில் 33 சேவை திட்டங்களை நிறைவேற்றினார்.

சிறப்பு விருந்தினர் தேவகோட்டைநகர்மன்றதலைவர் சுந்தரலிங்கம் புதிய உறுப்பினர்களை வாழ்த்தி சிறப்பித்தார். மாவட்ட அமைச்சரவை நிர்வாகிகள் கணேசன், ஐயப்பன், முத்துக்குமார், அஜீஸ், பாகம்பிரியான், வட்டாரத் தலைவர் பாலமுருகன், அமைச்சரவை இணைச் செயலாளர் லயன் ராமராஜ் ஆகியோர் வாழ்த்தினார். முக்கிய பங்கேற்பாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். செயலர் லயன் பேராசிரியர் மாரி நன்றி கூறினார்.



# தேவகோட்டை ஆர்ச் ரோட்டரி சங்க பதவியேற்பு விழா







தேவகோட்டை ஆர்ச் ரோட்டரி சங்க பதவி யேற்பு விழா

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஆர்ச் ரோட்டரி சங்க பதவி யேற்பு விழா நடைபெற்றது. விழாவில் Rtn ஆண்டனி சேவியர் தலைவராகவும்,Rtn பிரிட்டோ செயலாளராகவும் Rtn. சுரேஷ்பாபு பொருளாளராகவும் பதவி ஏற்று கொண்டனர். மாவட்ட ஆளுநர் Rtn.காந்தி கிருஷ்ணன் தலைமை ஏற்று புதிதாக பதவியேற்றவர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார். மேலும் லால்குடி சட்டமன்ற உறுப்பினர், பன்னாட்டு சமூக சேவை தலைவர் Rtn. AKRFC.டாக்டர்.லீமா ரோஸ் மார்ட்டின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார். வருங்கால மாவட்ட ஆளுநர் Rtn.சண்முகநடராஜ் புதிய உறுப்பினர்களை சங்கத்தில் இணைத்து வைத்தார். துணை ஆளுநர் Rtn.ஜெய பிரகாஷ் மோகன் வாழ்த்துரை வழங்கினார்.விழாவில் இரண்டு லட்சம் மதிப்பீட்டலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. Rtn.AR. சேவுகன் ரூ.28,50,000 பன்னாட்டு ரோட்டரி அறக்கட்டளைக்கு வழங்கினார்.Rtn. மெய்யப்பன், Rtn. AR. சேவுகன், தேவகோட்டை பெடரல் வங்கி மேலாளர் ஆகியோருக்கு பாராட்டு பரிசு வழங்கப்பட்டது. விழாவிற்கான ஏற்பாட்டினை தேவகோட்டை ஆர்ச் ரோட்டரி சங்க நிர்வாகிகள் வெகு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்



# திருப்பாச்சேத்தி பட்டறையில் தயாரான 500 கிலோ நேர்த்திக்கடன் அரிவாள்

ஆடி மாதம் வருது... 25 அடி உயர அருவாவுக்கு குவியும் ஆர்டர்கள்!

திருப்பாச்சேத்தி பட்டறையில் தயாரான 500 கிலோ நேர்த்திக்கடன் அருவா – தென் மாவட்டங்களைத் தாண்டி வட மாவட்ட பக்தர்களும் ஆர்வம். ஆடி மாதம் நெருங்கி வருவதையொட்டி, திருப்புவனம் மற்றும் திருப்பாச்சேத்தி பகுதிகளில் நேர்த்திக்கடன்அருவாதயாரிப்பு பணிகள் தீவிரமடைந்துள்ளன. விவசாய கருவிகள் தயாரித்து வந்த பாரம்பரிய கொல்லர் தொழிலாளர்கள் தற்போது அய்யனார் மற்றும் கருப்பண்ணசாமி கோயில்களுக்கு காணிக்கையாக செலுத்தப்படும் பிரம்மாண்ட அருவாக்களை தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

திருப்புவனம், திருப்பாச்சேத்தி உள்ளிட்ட பகுதிகளில் பழைய இரும்புகளை உருக்கி அருவா, மண்வெட்டி, கோடாரி, கடப்பாரை போன்ற விவசாய கருவிகள் தயாரிக்கப்படுகின்றன. விவசாயத்தில் இயந்திரங்களின் பயன்பாடு அதிகரித்ததால் இந்தத் தொழில் நலிவடைந்த நிலையில், தற்போது நேர்த்திக்கடன் அருவா தயாரிப்பே தொழிலாளர்களுக்கு முக்கிய வருவாயாக மாறியுள்ளது.

அய்யனார் மற்றும் கருப்பண்ணசாமி கோயில்களில் விரதமிருந்து நேர்த்திக்கடன் செலுத்தும் பக்தர்கள், ஒரு அடி முதல் 25 அடி உயரம் வரை உள்ள அருவாக்களை காணிக்கையாக வழங்கி வருகின்றனர். இதற்கான ஆர்டர்கள் அதிகரித்துள்ளதால் பட்டறைகளில் வேலைப்பளு கூடியுள்ளது.

குறிப்பாக, திருப்பா ச் சேத்தியைச் சேர்ந்த ரவி என்பவர் அரியலூர் மாவட்டத்தில் உள்ள கோயிலுக்காக 25 அடி உயரம் கொண்ட பிரம்மாண்ட அருவாவை தயாரித்துள்ளார். சுமார் 500 கிலோ எடை கொண்ட இந்த அருவாவை மூன்று தொழிலாளர்கள்15நாட்கள்உழைத்து உருவாக்கியுள்ளனர். அருவாவின் கைப்பிடி மட்டும் ஒன்றரைஅடிநீளம்கொண்டதாகவும்,அதன்பல்வேறு பகுதிகளில் வெண்கல மணிகள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.





மேலும், கோயிலில் நிலைநிறுத்தும் வகையில் கைப்பிடி மற்றும் அடிப்பகுதிகளில் சிறப்பு துளைகளும் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு அடி நீள அருவா தயாரிப்புக்கான கட்டணம் அதன் எடைக்கு ஏற்ப ரூ.1,000 முதல் ரூ.3,000 வரை மாறுபடும் நிலையில், இந்த 25 அடி அருவாவின் மதிப்பு ரூ.80 ஆயிரம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பட்டறை உரிமையாளர் ரவி கூறுகையில், "மதுரையில் இருந்து பழைய இரும்புகளை வாங்கி வந்து உருக்கி தட்டி அருவா தயாரிக்கிறோம். தற்போது தென் மாவட்டங்களைத் தாண்டி அரியலூர், விழுப்புரம் உள்ளிட்ட வட மாவட்ட பக்தர்களும் நேர்த்திக்கடன் அருவாக்களை வாங்கிச் செல்கின்றனர். ஆடி மற்றும் மாசி மாதங்களில் மட்டுமே அதிக ஆர்டர்கள் கிடைக்கின்றன. மற்ற காலங்களில் வேலை வாய்ப்பு குறைவாகவே இருக்கும்" என்றார்.

தற்போது ரவியின் பட்டறையில் மதுரை 18ஆம் படி கருப்பண்ணசாமி கோயிலுக்கும், அரியலூர் மாவட்ட கோயிலுக்கும் காணிக்கையாக செலுத்தப்பட உள்ள அருவாக்கள் தயாராகி பார்வையாளர்களை ஆச்சரியப்படுத்தி வருகின்றன. "விவசாய கருவி தயாரித்த கைகள்... இன்று 25 அடி நேர்த்திக்கடன் அருவா உருவாக்கி பக்தர்களின் நம்பிக்கையை வடித்து வருகின்றன" என்பது இப்பகுதி மக்களின் கருத்தாக உள்ளது.

# போதையற்ற சமூகத்தை உருவாக்க உறுதிமொழி

# விழிப்புணர்வு நிகழ்வில் மவுண்ட் லிட்ரா ஜீ பள்ளி பங்கேற்பு

போதையற்ற சமூகத்தை உருவாக்க உறுதிமொழி – தேசிய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு (NCB) – மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (CBSE) இணைந்து நடத்திய ★விழிப்புணர்வு நிகழ்வில் மௌண்ட் லிட்ரா ஜீ பள்ளி பங்கேற்பு

மதுரை வேலம்மாள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், தேசிய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு (NCB) மற்றும் மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (CBSE) இணைந்து நடத்திய "போதைப்பொருள் தடுப்பு மற்றும் போதைப்பழக்க விழிப்புணர்வு" சமூக முன்னெடுப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில் சென்னை கூடுதல் இயக்குநர், தேசிய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு (NCB), பி.அரவிந்தன், ஐ.பி.எஸ்., சென்னை கண்காணிப்பாளர், NCB மண்டல அலுவலகம் தீபக் கௌஷிக், வேலம்மாள் கல்வி நிறுவனங்கள் தலைவர் எம். வி. முத்துராமலிங்கம், மற்றும் சென்னை CBSE சிறப்புத் திறன் மையம் பிரிவு அலுவலர், எஸ். ஆர். ஸ்ரீநாத் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு போதைப்பொருள் தடுப்பு, மனநலப் பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்பு குறித்து சிறப்புரையாற்றி னர்.

மேலும் நிகழ்ச்சியில் போதைப்பொருள் பயன்பாட்டின் தீமைகள், இளைஞர்களிடையே போதைப்பழக்கத்தைத் தடுக்கும் வழிமுறைகள், மனநலப் பாதுகாப்பின் அவசியம், ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம் மற்றும் பள்ளி–குடும்பம்–சமூகம் ஆகிய மூன்றும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய பொறுப்பு குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.மேலும்" பொறுப்புணர்வும், விழிப்புணர்வும், சமூக அக்கறையும் கொண்ட மாணவர்களை உருவாக்குவதே எங்கள் நோக்கம். வாருங்கள்... ஒன்றிணைந்து போதையில்லா தலைமுறையையும், ஆரோக்கியமான இந்தியாவையும் உருவாக்குவோம்!" என்ற உறுதிமொழியை நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவரும் உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் சிவகங்கை மௌண்ட் லிட்ரா ஜீ சீனியர் செகண்டரி உறைவிட (CBSE) பள்ளியின் சார்பில் முதல்வர் அகிலாண்டேஸ்வரி, பள்ளி மேலாளர் தியாகராஜன் தலைமையில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் பள்ளியின் சார்பில் ஆர்வமுடன் பங்கேற்றனர்.








அதன் தொடர்ச்சியாக நிகழ்ச்சியில் பங்கேற்ற மௌண்ட் லிட்ரா ஜீ பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள், "இத்தகைய சமூக நலன் சார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பள்ளிகளும்கல்லூரிகளும்தொடர்ந்து முன்னெடுத்து, மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூகத்தில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்துவது மிகவும் பாராட்டத்தக்கது. இந்நிகழ்ச்சி எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் பயனுள்ள விழிப்புணர்வையும் அளித்துள்ளது" என்று தங்களது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

மேலும், இந்நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்த தேசிய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு (NCB), மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (CBSE), வேலம்மாள் கல்வி நிறுவனங்கள் மற்றும் மாணவர்களுக்கு இத்தகைய பயனுள்ள விழிப்புணர்வு நிகழ்வில் பங்கேற்கும் வாய்ப்பை வழங்கிய மௌண்ட் லிட்ரா ஜீ சீனியர் செகண்டரி உறைவிடப் பள்ளி நிர்வாகம், முதல்வர்,ஆசிரியர்கள்ஆகியோருக்கு பெற்றோர்கள் மனமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

# பிரான்மலையில் பட்டப்பகலில் கொள்ளையடித்து சென்ற இருவர் கைது

பூட்டியிருந்த வீட்டில் 60 கிராம் தங்கம், வெள்ளி கொலுசு,90 ஆயிரம் ரொக் கப் பணம் ஆகியவற்றை பட்டபகலில் கொள்ளைய டித்து சென்ற இருவர் கைது

தங்க நகை, பணம், வெள்ளி கொலுசு பறிமு தல்செய்துபோலீசார்விசா ரணை

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அருகே பிரான்மலை காந்தி நகரில் சித்ரா, ராஜா தம்பதியர் வசித்து வருகின்றனர்.

வழக்கம் போல கனவன் ராஜா,மனைவி சித்ரா இரு வரும்கடந்தபுதன்கிழமை காலை வீட்டின் கதவை பூட்டிவிட்டு கூலி வேலைக்கு சென்று விட் டனர். இந்நிலையில் வீடு திறந்து கிடப்பதாக சித்ரா






விற்கு பக்கத்து வீட்டு காரார் தகவல் கொடுத்துள் ளார்.

அதன் பேரில் பதறி அடித்து கொண்டு வீட் டுற்கு வந்த சித்ரா பூட்டியி ருந்த வீட்டின் கதவுகள் திறந்து இருப்பதை கண்டு வீட்டின் உள்ளே சென்று பார்த்த போது பீரோ கதவு கள் திறக்கப்பட்டு 60 கிராம் தங்கம், வெள்ளி கொலுசு,90 ஆயிரம் ரொக் கப் பணம் கொள்ளை போனது தெரியவந்தது.

இது குறித்து எஸ்.வி. மங்கலம் காவல் நிலையத் தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து போலீசார் தீவிர விசாரணை நடத்தினர். இந்நிலையில் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்ட புதுக்கோட்டை மாவட் டம்ஆலங்குடிமதடிகொள் ளையை சேர்ந்த சுந்தரகுமார் 36, ஆலங் குடி சுந்தர நாயகிபுரம் தி ரு க் க ட் ட ளை யை சேர்ந்தசெல்வம் 46 ஆகிய இருவரையும் எஸ்.வி.மங் கலம் போலீசார் கைது செய்து தங்க நகை,பணம், வெள்ளி கொலுசு ஆகிய வற்றை போலீசார் பறிமு தல் செய்தனர்.



# சிவகங்கையில் உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி

உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு சிவகங்கை மாவட்ட நிர்வாகம் மற்றும் சுகாதாரத் துறை சார்பில் விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வசுரபி விழிப்புணர்வு ரதத்தையும் பேரணியையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார். ஆட்சியர் அலுவலகத்திலிருந்து தாய்சேய் நல மருத்துவமனை வரை நடைபெற்ற பேரணியில் சுகாதாரத் துறை அலுவலர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் கல்லூரி







மாணவிகள் பங்கேற்றனர். “தாய் மற்றும் குழந்தை நலனுக்காக கர்ப்பங்களுக்கிடையே ஆரோக்கியமான இடைவெளியைப் பேணுவோம்” என்ற கருப்பொருளை வலியுறுத்தி, குடும்பநலத்திட்டங்கள் மற்றும் மக்கள்தொகை நிலைப்படுத்துதல் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



# கோலாந்தி - கூத்தணி கிராம மக்களின் 4 கோரிக்கைகள் நிறைவேற்றக்கோரி

# மாவட்ட ஆட்சியரிடம் மனு





காளையார்கோவில் அருகே ககோலாந்தி – கூத்தணி கிராம மக்களின் 4 கோரிக்கையினை நிறைவேற்றக்கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் தாலுகாவுக்கு உட்பட்ட மாரந்தை ஊராட்சியில் உள்ள கோலாந்தி மற்றும் கூத்தணி கிராம பொதுமக்கள் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் பல் வேறு கோரிக்கைகள் அடங்கிய மனு அளிக்கப்பட்டுள்ளது. அந்த மனுவில், கடந்த ஆறு மாதங்களாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் (100 நாள் வேலைத் திட்டம்) கீழ் இரு கிராமங்களுக்கும் வேலை வழங்கப்படவில்லை என்றும், இதுகுறித்து ஊராட்சி செயலாளர் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பலமுறை மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

மேலும், கடந்த ஆண்டு பருவமழை பெய்ததால் வேளாண்மை மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு வறட்சி நிவாரணம் வழங்கப்படும் என உறுதியளித்ததாகவும், ஆனால் இதுவரை கோலாந்தி மற்றும் கூத்தணி கிராமங்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல், பரமக்குடியில் இருந்து கோலாந்தி வழியாக சேத்தூர் செல்லும் டவுன் பஸ் கடந்த ஆறு மாதங்களாக கிராமத்திற்கு வராததால் பொதுமக்கள் கடும் சிரமம் அடைந்து வருவதாகவும், இதுகுறித்தும் பலமுறை மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர். மேலும், கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் இரு கிராமங்களுக்கும் போதிய அளவில் குடிநீர் விநியோகம் நடைபெறவில்லை என குற்றம்சாட்டியுள்ள பொதுமக்கள், இந்த நான்கு கோரிக்கைகளையும் மாவட்ட நிர்வாகம் உடனடியாகபரிசீலித்துநடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.



# 4.5 கி.மீ. சாலைப் பணி பாதியில் நிறுத்தம்... அவதியில் கிராம மக்கள்

# MLAவுடன் ஆட்சியரிடம் மனு

சிவகங்கை அருகே 4.5 கி.மீ. சாலைப் பணி பாதியில் நிறுத்தம். கிராம மக்கள் அவதி. சாலைப் பணியை முழுமையாக முடிக்க கோரி கிராம மக்கள் MLAவுடன் ஆட்சியரிடம் மனு



சிவகங்கை மாவட்டம் ஒக்குபட்டி அருகே அழகிச்சிப்பட்டி – மலம்பட்டி வழியாக சோலைப்பட்டி வரை 4.5 கிலோமீட்டர் நீளத்தில் நடைபெற்று வந்த சாலைப் பணி ஜல்லி கொட்டப்பட்ட நிலையில் நிறைவடையாமல் கிடப்பதால் பொது மக்கள், வாகன ஓட்டிகள் மற்றும் பள்ளி மாணவர்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.



இதுகுறித்து ஒப்பந்ததாரரிடம் கேட்டபோது, தார் விலை உயர்வே பணித் தாமதத்திற்குக் காரணம் எனகூறியதாக தகவல் வெளியாகியுள்ளது. இதையடுத்து, சாலைப் பணியை உடனடியாக முழுமையாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனகிராம மக்கள் சார்பில் சிவகங்கை மாவட்ட ஆட்சியரிடம் சிவகங்கை தவெக MLA குழந்தை ராணி நாச்சியார் மனு அளிக்கப்பட்டது. மனுவைப் பெற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சியர், சம்பவ இடத்தை நேரில் ஆய்வு செய்து உடனடி நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்டதுறைஅதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.



# காளையார் கோவிலில் ரோட்டரி கிளப் ஆப் சுப்ரீமின் பணியேற்பு விழா

ரோட்டரி கிளப் ஆப் காளையார்கோவில் சுப்ரீமின் பணியேற்பு விழா

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலில் ரோட்டரி கிளப் ஆப் காளையார்கோவில் சுப்ரீமின் 20262027 ஆம் ஆண்டிற்கான பணியேற்பு விழா ஆரோ மஹாலில் நடைபெற்றது. தலைவர் சுந்தர் வரவேற்றார். செயலாளர் நிர்மல் ஆரோக்கியசாமி ஒருவருட செயலறிக்கை வாசித்தார். மாவட்டம் 3212 இன் முன்னாள் மாவட்ட ஆளுநர் மருத்துவர் சின்னதுரை அப்துல்லா தலைமை வகித்து புதிய தலைவராக வின்செண்ட் சார்லஸ் புதிய செயலாளராக ஆரோக்கியசாமி புதிய பொருளாளராக சார்லஸ் ஆகியோரை பணியமர்த்தி சிறப்புரையாற்றினார். புதியதலைவர்வின்செண்ட் சார்லஸ் ஏற்புரை வழங்கினார். புதிய செயலாளர் ஆரோக்கியசாமி இவ்வருட புதிய ஆட்சி மன்றக் குழுவை அறிமுகம் செய்து வைத்தார். முன்னாள் துணை ஆளுநர் தேசாய் புதிய ஆட்சி மன்ற குழு உறுப்பினர்களை வாழ்த்தி பேசினார். மண்டலம் 39 இன் துணை ஆளுநர் கந்தசாமி 11 புதிய உறுப்பினர்களை சங்கத்தில் இணைத்து வாழ்த்துரை வழங்கினார்.

அரசு மேல்நிலைப் பள்ளிகள் காளையார்கோவில் கொல்லங்குடி சிலுக்கப்பட்டி மறவமங்கலம் சகாயராணி மேல்நிலைப்பள்ளி சூசையப்பர் பட்டணம் ஸ்ரீ சரஸ்வதி விகாஸ் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஹோலி ஸ்பிரிட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிகளில் பயின்ற 20252026 ஆம் ஆண்டு பள்ளிக்கல்வித்துறையில் பத்தாம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளில் முதலிடம் இரண்டாமிடம் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் கேடயம் பரிசுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டனர். கல்லூரி மாணவர்களுக்கு கல்விக்கட்டணத்தொகை பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை மருத்துவ உதவிகள் ஏழை மக்களுக்கு அரிசி மூட்டை என நலத்திட்ட உதவிகள்வழங்கப்பட்டன. லால்குடி சட்டமன்ற உறுப்பினர் லீமா ரோஸ் மார்டீன் முன்னாள் துணை ஆளுநர் சண்முக ராஜேஸ்வரன் வாழ்த்துரை வழங்கினார்கள். செயலாளர் ஆரோக்கியசாமி நன்றி கூறினார். ஆசிரியர் அனன்சியா நிகழ்ச்சிகளை சிறப்பாக ஒருங்கிணைத்தார். ரோட்டரி சங்க குடும்ப உறுப்பினர்கள் உறவுகள் நண்பர்கள் பயனாளிகள் மாணவ மாணவிகள் ஊடக நண்பர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.









WHATSAPP
மூலம் காரைக்குடி நியூஸ்
WHATSAPP
சேனலை பின்பற்ற
SCAN செய்யவும்

# பலவான்குடியில் கால்பந்தாட்டப் போட்டி









பலவான்குடி ஸ்ரீ செங்கமலநாயகி கால்பந்து கழகத்தின் சார்பாக

வெள்ளி சுழற் கோப்பை ஆறாம் ஆண்டு கால்பந்தாட்ட போட்டி இரவு பகல் ஆட்டமாக ஜூலை 10 ,11 ,12, ஆகிய தேதிகளில் சுமார் 45 அணிகள் பங்கு பெற்றன.

முதல் பரிசாக முப்பதாயிரத்தி ஒன்று இரண்டாவது பரிசாக 25001, மூன்றாவது பரிசாக 20001, நான்காம் பரிசாக 15001, ஆகிய பரிசுகளும் கால் இறுதிப் போட்டியில் வெற்றி வாய்ப்பு இழந்த அணிகளுக்கு ரூபாய் 5001ம் பரிசாக வழங்கப்பட்டது.

முதல் பரிசினை சிங்கப்பூர்வாழ் இளை ஞர்களும் இரண்டாவது பரிசினை செய்யது அபுதாஹிர், மூன்றாவது பரிசினை சுப,பழனியப்பன்அம்பலம் நினைவாக குடும்பத்தாரும் நான்காவது பரிசினை ராமசாமி அம்பலம் மெய்யம்மை நினைவாக ராமச்சந்திரன் மீனாள் குடும்பத்தாரும் கால் இறுதிப் போட்டியில் வெற்றி வாய்ப்பு இழந்தவர்களுக்கு 5001 வெள்ளி சுழற் கோப்பையை வழங்கியவர் புலவர் சீனிவாசன் மாணவர் முகமது சபாஷ் கான் ஜீனத் பலவான்குடி வாழ் நண்பர்கள் சார்பாகவும் வழங்கப்பட்டது.

தலைமை ஏ கே எம் லட்சுமணன்,வரவேற்புரை பழ,பாண்டியன் சிறப்பு விருந்தினர்களாக வந்திருந்து போட்டியை துவங்கி வைத்தவர்கள்.

மக்கள் மருத்துவர் குமரேசன் குளோபல் மெஷின் மருத்துவமனை நிறுவனர் இயக்குனர் காரைக்குடி இஸ்மாயில் காணல் கண் மருத்துவமனை நிர்வாக மேலாளர் மெய்யப்பன், தொழிலதிபர் திருஞானம், செந்தில்நாதன் முன்னாள் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் மெய்யப்பன், திருப்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பி னர் சீனிவாச சேதுபதி, கே ஆர் ஆனந்தன் தலைவர் சிவகங்கை மாவட்ட கால்பந்து கழகம் சுப்பிரமணியன் கல்லல் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் ஜெயராமன் ஆய்வாளர் குன்றக்குடி காவல் நிலையம் மற்றும் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

விளையாட்டு வீரர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் ஜூலை 11, 12 தேதிகளில் குளிர்பானம் நீர்மோர் பிரியாணி உணவு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வீரர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் பலவான்குடி ஸ்ரீ செங்கமல நாயகி கால்பந்தாட்ட குழுவினர் பலவான்குடி நாட்டார்கள் இளைஞர்கள் மற்றும் ஊரார்கள் சார்பாகவும் மு,இராசா, பலவான்குடி அப்துல் காதர் ஆகியோர் சார்பாகவும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

# காரைக்குடியில் மாநில அளவிலான 24 ஆம் ஆண்டு புத்தகத் திருவிழாவின் நிறைவு விழா




சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கம்பன் மணி மண்டபத்தில் காரைக்குடி புத்தகத்திருவிழா குழு சார்பில் மாநில அளவிலான 24 ஆம் ஆண்டு புத்தகத்திரு விழா ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவடைந்தது.

இந்த புத்தகத்திருவிழா புத்தகக்கண்காட்சி கடந்த ஜூலை 3ந்தேதி தொடங்கியது.சமார் 50 அரங்குகளில் பதிப்பாளர்கள், புத்தக விற்பனையாளர்கள்புத்தகங்களை காட்சிக்கு வைத்திருந்தனர். விற்பனையில் 10 சதவீதம் சலுகையும் வழங்கினர். புத்தகத்திருவிழாவையொட்டி தினந்தோறும் பள்ளி,கல்லூரி மாணவ,மாணவிகளுக்கான பல்வேறு போட்டிகள், வினாடி வினா நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இதில் வெற்றிபெற்றோருக்கு புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

புத்தகத்திருவிழாவையொட்டி மாநில அளவில் பேராசிரியர் அய்க்கண் வசந்தா நினைவு சிறுகதைப்போட்டி நடத்தப்பட்டது. இதில் செங்கல்பட்டு மாவட்டம் ஊரப்பாக்கம் இரா.கலைச்செல்வி எழுதிய அவனுக்குள் அவள்' என்ற சிறுகதைக்கு ரூ.10000 முதல் பரிசும், திருச்சி மாவட்டம் மணப்பாறை அறிவுச்செல்வன் எழுதிய வாழாமல் ஒரு வாழ்வும் சாகாமல் ஒரு சாவும்' என்ற சிறுகதைக்கு ரூ.7,500 இரண்டாம் பரிசும் மற்றும் திருச்சி மாவட்டம் சமயபுரம் ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு எழுதிய ' எச்சில்' என்ற சிறுகதைக்கு ரூ. 5000 மூன்றாம் பரிசம் வழங்கப்பட்டது. புத்தகத் திருவிழா நிறைவு விழா ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்றது. இதில் காரைக்குடி தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ். மாங்குடி, வித்யாகிரி கல்வி நிறுவனங்களின் தாளாளர் ஆர். சுவாமிநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசும், எழுத்தாளர்கள் துரை.அறிவழகன் மற்றும் க. மோகன் ஆகியோருக்கு பேராசிரியர்அய்க்கண்இலக்கிய விருதும், தனித்திறன் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு புத்தகப் பரிசும் வழங்கி சிறப்புரையாற்றினர்.

புத்தத்திருவிழா குழு உறுப்பினர் அருணாதேவி அய்க்கண் வாழ்த்துரையும் செயலர் நீ. இரவிச்சந்திரன் செயலர் உரையும் வழங்கினார். புத்தகத்திருவிழா குழு துணைத்தலைவர் ஏ. செல்வராஜ் விழாவை தொகுத்து வழங்கினார். விழாவில் பொருளாளர் வி. வெங்கடாசலம், இணைச்செயலாளர் எஸ். ராஜா அலெக்ஸாண்டர், குழு உறுப்பினர்கள் தேவி நாச்சியப்பன், அண்ணாமலை, வழக்குரைஞர் கமல் தயாளன், ஆசிரியர்கள் நல்லாசிரியர் மெ. செயம் கொண்டான், முனைவர் ஜெ.பிரகாஷ்மணிமாறன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக புத்தகத்திருவிழா குழுத் தலைவர் பி.வி. சுவாமி வரவேற்றுப்பேசினார். முடிவில் இணைச்செயலர் என்.பி. ராமசாமி நன்றி கூறினார்.

# காளையார்கோவில் புனித மைக்கேல் பாலிடெக்னிக் கல்லூரியில்

## ATAL ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி

காளையார் கோயில் புனித மைக்கேல் பாலிடெக்னிக் கல்லூரியில் ATAL ஆசிரியர் திறன் மேம்பாட்டு பயிற்சி ஜூலை 12 முதல் ஜூலை 18 வரை 6 நாட்களுக்கு நடத்தப்பட உள்ளது.

இதற்கான துவக்க விழாவில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் Dr.G. ரவி துவக்கி வைக்கப்பட்டது. கல்லூரி முதல்வர் Lion. N.மகேந்திரன் வரவேற்றுப்பேசினார். மதுரை புனித மைக்கேல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் முதல்வர் Lion. Dr.M.மதிவதணன் ATAL முக்கியத்துவம் பற்றி பேசினார். புனித மைக்கேல் கல்வி குழுமத்தின் தலைவர் Lion. Dr .M.ஸ்டாலின் ஆரோக்கியராஜ் சிறப்புரையாற்றினார். இதனைத் தொடர்ந்து காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் Dr. G.ரவி இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஆசிரிய பெருமக்களுக்கு cognitive industrial IOT யின் அவசியம் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். மேலும் இன்றைய உலக அளவில் நமது இந்தியர்களின் கண்டுபிடிப்பு நிலை மேலும் அதற்கான அவசியம் அனைத்தையும் சிறப்பாக எடுத்துக் கூறினார். இந்த நிகழ்வில் காளையார் கோயில் புனித மைக்கேல் பொறியியல் கல்லூரியின் முதல்வர் Dr. கற்பகம், சிவகங்கை புனித மைக்கேல் மெட்ரிக் பள்ளியின் முதல்வர் ஜெயந்தி மற்றும் காளையார் கோயில் புனித மைக்கேல் மெட்ரிக் பள்ளியின் முதல்வர் டெய்சி ஆரோக்கிய செல்வி கலந்து கொண்டனர். நிறைவாக J. சத்திய பிரியா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கி நன்றி கூறினார். ATAL திறன் மேம்பாட்டு பயிற்சியின் Co Cordinator அசோக் , துறை தலைவர் மெக்கானிக்கல் இந்த நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்தினார். நிறைவாக நாட்டுப் பண் பாட துவக்க விழா இனிதே நிறைவேறியது.




